விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 015 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 19 திங்கட்கிழமை (03.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## அக்கரப்பத்தனையிலும் இந்து விக்கிரகங்கள் உடைப்பு





10ஆம் பக்கம் பார்க்க

## இனப்படுகொலை செய்யும் அரசே ஆட்சியில் உள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்



(கொழும்பு)

அரசாங்கம் என்ற ஒன்று அமைக்கப்படுவது மக்களைக் காக்கவே எனவும் துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசாங்கம் மக்களைக் கொல்லாமல் கொல்கிறது. இவ்வாறு நோக்கும்போது தற்போதைய அரசாங்கம் இனப்படுகொலை செய்யும் அரசாங்கமாகவே உள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இணை ஊடகப் பேச 15

## 2022இல் இலங்கைக்கு பாரிய அழிவு ஏற்படும்

### எதிர்க்கட்சி எம்.பி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையை சிறப்பாக நிர்வகிப்போம் எனத் தெரிவித்த கோட்டாபய - மகிந்த தரப்பினர். அனைத்தையும் நாசம் செய்து விட்டனர் என ஐக்கிய மக்கள் சக்திகடுமையாகவிமர்சித்துள்ளது. 15

## கொரோனா 24 பேர் பலி

(கொழும்பு)

கொடிய கொரோனா நோயினால் இலங்கையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்துள் 15

### திடீர் உடல்நலக் குறைவால்

## பிறந்து 31 நாட்களேயான குழந்தை உயிரிழப்பு

### கோண்டாவிலில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

பிறந்து 31 நாட்களேயான குழந்தை ஒன்று திடீர் உடல்நலக் குறை 15

### பட்டதாரி பயிலுநர்களுக்கு

## நிரந்தர நியமனம்

### அமைச்சர் தினேஷ் அறிவிப்பு



(கொழும்பு)

பட்டதாரி பயிலுநர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகவுள்ளது. 15

### சிங்கள பௌத்தர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற

# கடுமையான முடிவுகளை எடுப்பதற்கு நான் தயார்!

### பத்ம விபூஷண கௌரவப் பட்டம் பெற்றபின் கோட்டாபய உறுதி



(கொழும்பு)

என்னை ஜனாதிபதி ஆக்குவதற்கு பல அர்ப்பணிப்புக்களை செய்த சிங்கள பௌத்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற எடுக்கவேண்டிய கடுமையான முடிவுகளை எடுக்க நான் தயாராக உள்ளேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு ஸ்ரீலங்காதீஸ்வர பத்ம விபூஷண பட்டம் வழங்கும் நிகழ்வில் நேற்று கோட்டே சங்க சபையில் இடம் பெற்ற நிகழ்விலேயே 15

### கோவிட்டால்

## மன்னாரில் முதியவர் பலி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொரோனா மரணம் ஒன்று பதிவாகியுள்ள நிலையில் மன்னார் மாவட்டத் 15

### வடக்கு - கிழக்கில்

## இடியுடன் கூடிய மழை பெய்யும்

(கொழும்பு)

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடுமென 15

## பொலிஸ் உத்தியோகத்தர் கீரிமலையில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அவரது வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கீரிமலை கூவில் பகுதியில் அமைந்துள்ள அவரது வாடகை வீட்டிலிருந்து மட்டக்களப்பைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ரமணன் (வயது-47) என்ற பொலிஸ் உத்தி 15

## தேவையேற்பட்டால் ஜனாதிபதி அமைச்சரவையை மறுசீரமைப்பார்

### சுகாதார அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

அமைச்சரவை மறுசீரமைப்புக்கான தேவை ஏற்பட்டால், அரசியலமைப்பின் ஊடாக அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்வார் என சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட்களின் விலை அதிகரிப்புக்கு அமைச்சர்கள் பொறுப்புக்கூற வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

**செய்ய முடியாதவற்றை செய்ததன் காரணமாகவே முழு நாடும் கஷ்டத்தில் விழ்ந்துள்ளது எனவும் உணவு நெருக்கடிக்கு, துறைக்கு சம்பந்தமான அமைச்சர்களும் கொள்கை அளவில் தீர்மானங்களை எடுத்த நபர்களும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

பொருட்களின் விலை அதிகரிப்புக்கு வர்த்தக அமைச்சர், கமத்தொழில் அமைச்சர், உணவு அமைச்சர் ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும் எனத் தெரிவித்துள்ள பிரேமஜயந்த, கமத்தொழில் அமைச்சர் முற்றாக தோல்வியடைந்துள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் டொலர் கையிருப்பில் இல்லை என்றால், டொலரை இல்லாமல் ஆக்கியவர்கள் அதற்கு பொறுப்புக் கூறவேண்டும்.

பசளை கிடைக்காமல் செய்தால், பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என்பது கூறித் தெரியவேண்டிய விடயமல்ல.

நான் அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும் கொள்கை ரீதியான முடிவுக்களை எடுக்கும் இடத்தில் நானில்லை. என்னை நாற்காலி ஒன்றில் அமரவைத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டிய காலம் கடந்து சென்று விட்டது. தற்போது வேறு ஒரு அணியால் மாத்திரமே இந்த பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க முடியும் எனவும் சுசில் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# இயற்கை உரம் பயன்படுத்தாத விவசாயிகளுக்கு இழப்பீடு இல்லை

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

அரசாங்கம் வழங்கிய இயற்கை உரங்களைப் பயன்படுத்தாத விவசாயிகளுக்கு அரசாங்கம் இழப்பீடு வழங்காது என விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர், அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு கோரி விண்ணப்பத்தை அரசாங்கம் வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

இழப்பீடு வழங்கும்போது அரசு வழங்கிய உரத்தை விவசாயி பயன்படுத்தியுள்ளாரா என்பது குறித்து அரசு ஆராயும் என்றார். அரசாங்கம் நான்கு வகையான உரங்களை வழங்கியதைக் குறிப்பிட்ட அவர், விவசாயி எந்த உரத்தையும் பயன்படுத்தாவிட்டால் இழப்பீடு வழங்க முடியாது என்று கூறினார்.

அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து நட்டஈடு வழங்கப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கரிம உரம், உயிர் திரவ உரம், பொட்டாசியம் குளோரைட்டு மற்றும் நனோ நைட்ரஜன் போன்றவற்றை அரசாங்கம் வழங்கியதாக அமைச்சர் அளுத்கமகே தெரிவித்தார். (ஞா)


## அறிவித்தல்

கொக்குவில் கஜன் மண்டபத்திற்கு
அருகாமையில் இயங்கிவந்த
ஆட்டிறைச்சிக் கடையை
உரிமையாளர் நல்லையா
உதயகுமார் (பெரியதம்பி)
2022.01.01 அன்று கொக்குவில்
சந்தைக்கு இடம் மாற்றியுள்ளார்
என்பதனை அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும்
அறியத்தருகின்றார்.
(9322)



தொடர்புகளுக்கு
077 085 6479



யாழ். நகரின் No. 1 கல்வி நிறுவனம்

O/L DAY CLASS
(துரித மீட்டல் வகுப்புக்கள்)

ஆரம்பம் : 05.01.2022
புதன் காலை 8.00மணி

- யாழ். நகரின் முன்னணி ஆசிரியர் குழாம்
- முக்கிய பாடங்களுக்கான Paper class
- MON → FRI - மு.ப. 8.00 - 2.00 மணி வரை
- அனுமதிகள் இன்று முதல்

(9367)

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
077 459 8440



# சேவைநலன் பாராட்டும்

ஓய்வுநிலைக்கான வாழ்த்துதலும்




இன்று (03.01.2022) திங்கட்கிழமை அதிபர் சேவையில் இருந்து ஓய்வுபெறும்

திரு. சிவசம்பு தர்மரத்தினம்

அதிபர் - யா/தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை, பருத்தித்துறை

சேவை விபரம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | யா/இமையாணன் அ.த.க. பாடசாலை | 1992.10.01 - 1997.12.31 |
| ஆசிரியர் / அதிபர் | யா/குடத்தனை கரையூர் றோ.க.த.க. பாடசாலை | 1998.01.01 - 2012.12.31 |
| அதிபர் | யா/தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை | 2013.01.01 - 2022.01.03 |

ஓய்வுபெறும் அதிபர் தனது ஓய்வுக் காலத்தில் உடல், உள நலத்தோடு வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர்கள், மாண[illegible]
யா/ தட்டாதெரு மெ.மி.த.க. பாட[illegible]
(C-3401)



# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி தர்சினி சந்திரசேகரம் அவர்களின்
தந்தையார்

அமரர்
செ. சண்முகலிங்கம்



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(9364)

யா / மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பளை.

கல்லூரிச் சமூகம்



# கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் மூத்த உறுப்பினரும்
ஆலோசகருமான திரு. இ. சபாகுணசிங்கம்
(குலம் - கனடா) அவர்களின் அன்புச் சகோதரி

திருமதி
பொன்மலர் நடேசன் (மலர்)



அவர்களின் மரணச் செய்தி அறிந்து
துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(9366)

பிரிவால் துயருறும்
[illegible]வில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியே எமக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு

## நாம் ஒன்றிணைந்து விரைந்து செயற்படுவோம்- சிவசக்தி ஆனந்தன்

(நெளுக்குளம்)

**தமிழின விடுதலைக்கான போராட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்பட்டுள்ள போதும் அவை நழுவவிட்டமை தான் கடந்தகால வரலாறாக உள்ளது. தற்போது மீண்டுமொரு சந்தர்ப்பம் உருவாகியுள்ள நிலையில் அதனை நழுவ விட்டுவிடக்கூடாது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.**



நேற்று அவர், வெளியிட்ட ஊடகங்களுக்கான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கமானது தற்போது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. அதேநேரம், ஆட்சியாளர்களின் பங்காளிகளுடனும் அரசியல் ரீதியான முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. சிங்கள, பௌத்த கோட்பாட்டின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த 69 இலட்சம் தென்னிலங்கை மக்களே ஆட்சியாளர்களைத் திட்டித்தீர்க்கின்றனர். இவ்வாறான நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆட்சியாளர்கள் இந்தியா, சீனா, அமெரிக்கா என்று தமக்காக திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் அனைத்துக் கதவுகளையும் தட்ட ஆரம்பித்துள்ளார்கள். ஆனால் இலங்கையை மையப்படுத்தி ஏற்பட்டிருக்கும் பூகோளப் போட்டியின் பங்குதாரர்களான இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகியன தன்னலன்களை மையப்படுத்தி காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளன.

நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ 9 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்வதற்கு தயாராக இருகிறார். குஜராத்தில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்பது காரணமாக கூறப்பட்டாலும், பிரதமர் மோடியைச் சந்திப்பது, இந்தியாவிடமிருந்து பெறக்கூடிய டொலர்களை விரைவுபடுத்துவது என்பன அந்தப் பயணத்தின் பின்னணிகளாக உள்ளன.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளும், ஏனைய முஸ்லிம், மலையக கட்சிகளும் இணைந்து தமிழ் பேசும் கட்சிகளாக பிரதமர் மோடிக்கு அனுப்பவுள்ள ஆவணத்தினை விரைவுபடுத்த வேண்டியுள்ளது.

குறித்த ஆவணத்தினை அனுப்புவதன் ஊடாக, இந்தியா இலங்கை மீதான தனது பிடியை உறுதிப்படுத்தும் அதேநேரம், அதன் பயனாக ஆகக்குறைந்தது இந்திய இலங்கை ஒப்பந்தத்தினையாவது முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும்.

அதிகாரப் பகிர்வுக்கான முதற்படியாக அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தினை பாதுகாப்பதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமானதாக இருக்கும்.

ஆட்சியில் உள்ள தரப்பினர் புதிய அரசியலமைப்பினை முன்னகர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை கையிலெடுத்துள்ள நிலையில் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அகற்றப்படும் அபாயமுள்ளது.

ஆகவே தமிழர்களின் அபிலாஷைகளை 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்றாலும் கூட முதலில் இருப்பதைப் பாதுகாக்க வேண்டியுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள பூகோள, பிராந்திய அரசியல், இராஜதந்திர மூலோபாயச் சூழலை உணர்ந்து கொள்ளாது வாய்ப்பினை நழுவ விட்டால் தமிழினத்தின் எதிர்காலம் மேலும் மோசடைவதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன.

எனவே குறிப்பறிந்து, தீர்க்கமான தீர்மானத்தினை எடுக்கும் அதேநேரம், தொடர் தாமதங்களை தவிர்த்து மிகமிக விரைவாக கூட்டு ஆவணத்தினை பிரதமர் மோடிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென தெரிவித்தார்.

(4-5-299)

## பதவி விலக வேண்டிய அவசியம் எனக்கில்லை-பிரதமர் மகிந்த

(கொழும்பு)

பிரதமர் பதவியில் இருந்து ஓய்வு பெறும் அளவிற்கு தனக்கு அவசியமில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வார இறுதி பத்திரிகை ஒன் றுக்கு கருத்து வெளியிடும் போதே பிரதமர் இதனை குறிப்பிட்டார்.

நாட்டிற்கு கிடைத்துள்ள ஜனநாயக சுதந்திரத்தை பயன்படுத்தி சிலர் அரசாங்கம் குறித்து பலவேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறான கதைகளை நாட்டின் புத்திஜீவிகள் ஏற்றுக் கொள்வதில்லை. ஜனநாயக சுதந்திரத்தை தவறாக பயன்படுத்திக்கொள்வது நியாயமானது அல்ல என பிரதமர் தெரிவித்தார்.

சமகால பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகவுள்ள நிலையில், புதிய பிரதமராக பசில் ராஜபக்ஷ பதவியேற்கவுள்ளதாகத் தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



## தீர்மானம் மிக்க அமைச்சரவை இன்று கூடுகிறது

(கொழும்பு)

2022-ஆம் ஆண்டுக்கான இலங்கை அரசின் முதல் அமைச்சரவை கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்துக்கு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் திறைசேரி செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

நாடு எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கான வழிகள் குறித்து இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

அத்துடன், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதா? இல்லையா? என்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படவுள்ளது.

இந்த அமைச்சரவைக் கூட்டம் தீர்க்கமானதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## எரிவாயு வெடிப்புச் சம்பவத்தின் பின்னணியில் அரசியல்வாதிகள்

### பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர்

(கொழும்பு)

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சார் வெடிப்புச் சம்பவங்களின் பின்னால் அரசியல்வாதிகள் இருப்பதால்தான் அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகிறது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு காரணமாக பல பொருட்சேதங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவ்வாறு இருந்தும் அரசாங்கம் இதனுடன் சம்பந்தப்பட்ட யாரையும் கைதுசெய்யவும் இல்லை. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் இல்லை.

இந்த சம்பவத்துக்கு பின்னால் அரசியல்வாதிகள் இருப்பதால்தான் அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகிறது. என்றாலும் அரசாங்கம் தற்போது அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்து வருகிறது.

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் அரசாங்கத்தின் நிறுவனமாகும். நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் அமைச்சுக்கு கீழே அது இருக்கிறது.

அதன் தற்போதைய தலைவர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவராகும். இதற்கு முன்னர் இருந்த தலைவர் அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட வர்.

அவர் தலைவர் பதவியில் இருந்து விலகியதன் பின்னர், சமையல் எரிவாயு சிலிண்டரின் இரசாயன கலவையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதை அவரே வெளிப்படுத்தி இருந்தார்.

ஆனால் இவை தொடர்பாக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நடவடிக்கையே தற்போது சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாகும்.

அதனால் இந்த பிரச்சினைக்கு அதிகாரிகள் மீது மாத்திரம் பழியை சுமத்தி அரசாங்கம் தப்பித்துக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் பிரீமியர் லீக் ஏலப்பட்டியலில் கனடா தமிழ் வீரர்



பங்களாதேஷ் பிரீமியர் லீக் வீரர்கள் ஏலப்பட்டியலில் இலங் கையை பூர்வீகமாக கொண்ட கனடா தமிழ் வீரர் ஒருவரின் பெயரும் உள்ள டக்கப்பட்டுள்ளது.

8 ஆவது பங்களா தேஷ் பிரீமியர் லீக் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள் ளது.

இந்த தொடரில் 6 அணி கள் பங்கேற்கின்றன. இந்த அணிகளிற்கான வீரர் களின் ஏலப்பட்டியல் வெளி யிடப்பட்டுள்ளது.

இதில் கனடாவைச் சேர் ந்த தமிழ் வீரரான காவியன் நரேசின் பெயரும் உள்ளடக் கப்பட்டுள்ளது. (4-6)



புது வருடத்தை முன் னிட்டு அக்கரையான் குளம் நன்னீர் மீனவர் களின் ஏற்பாட்டில் மீன வர்களுக்கிடையிலான படகுப்போட்டி மற்றும் நீச்சல் போட்டி என்பன அக்கராயன் குளத் தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

போட்டியில் வெற்றி யீட்டியோருக்கான பரி சில்களும் வழங்கப் பட்டன. (படங்கள்: தேவானந்தன்)



முல்லைத்தீவு உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற வடமாகாண கராத்தே காட்டா மற்றும் குமிட்டே சுற்றுப் போட்டிகளில் யாழ்.மாவட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் அணிகள் முதலி டத்தை பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டன. (படங்கள்:-மகாலிங்கம்)

# இளையோர் உலக கிண்ணம் ஜனவரி 14 ஆரம்பம்

ஆடவர்களுக்கான ஐ.சி. சி.யின் 19 வயதுக்குட்பட்ட 2022 உலகக் கிண்ண ஆரம்ப நாள் நெருங்கி வரு கின்ற நிலையில் ஒவ்வொரு அணிகளும் தங்களது வீரர் களின் விபரங்களை வெளி யிடத் தொடங்கியுள்ளன.

போட்டிகள் ஜனவரி 14 முதல் பெப்ரவரி 05 ஆம் திகதி வரை நடைபெறும். முதன் முறையாக கரீபியன் தீவுக ளில் நடத்தப்படும் போட்டிக ளில் 16 நாடுகள் பங்கேற்க வுள்ளதுடன், மொத்தம் 48 ஆட்டங்கள் நடைபெறும்.

2022 இளையோர் உல கக் கிண்ண தொடரில் ஆப் கானிஸ்தான், அவுஸ்திரே லியா, பங்களாதேஷ் கனடா, இங்கிலாந்து, இந்தியா, அய ர்லாந்து, பாகிஸ்தான், பப் புவா நியூகினியா, ஸ்கொட் லாந்து, தென்னாபிரிக்கா, உகண்டா, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் பங்கேற்கும். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2485

**தனாதியன்**

அப்படி என்ன தான் 2021 ல வெட்டி முறிச்ச...



எனக்கு 6 அடி குழி வெட்டாம இருந்ததே சாதனை தான் போவியா...

**யதுர்ஷன்**

இன்னமும் அடிக்கவே இல்லை அதுக்குள்ள அழுகிறாய்...!!!




**கனிவிழி**




அண்ணே லைட்டா ஆரம்பிச்சுட்டுட்டு போற.. மீதிய நீ பாத்துக்கோ...




அப்படியாண்ணே சரிண்ணே! சரிண்ணே..!!

**அட்சயன்**

தாலி கட்டிய கணவனுக்கு மனைவியை அதிகாரம் செய்ய உரிமை உண்டோ?



உரிமை உண்டு. ஆனால் தைரியம் உண்டா என்பது தான் முக்கியம்

**டருஜன்**



வாழ்க்கை இப்படியே போயிருமா சார்..




எல வாழ்க்கை இப்படி தான் போகும்.. இஷ்டம் னா இரு... இல்லைனா மருந்த குடிச்சுட்டு சாவு

**இலக்சிகா**




இங்க பாரு உன்னால நான் ரொம்ப கஷ்டப்பட் டுடேன் திரும்பிப் பார்க்காம ஓடிப் போயிரு




இனி நீயும் நானும் ஃபிரண்ட் நீ என்னைய நல்லா பாத்துக்கனும் சரியா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நன்மை அறிந்து அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்

## சு.க வலியுறுத்து

(கொழும்பு)

"அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக ஜனாதிபதிக்கு சர்வ பலமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மக்களின் நன்மைக்காக அவர் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்." - என அரச பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறிஜயசேகர மேலும் தெரிவிக்கையில்,



"நாம் மக்களின் தேவையறிந்து அதற்கேற்ற வகையில் செயற்பட்டால், மக்கள் எமக்கு எதிராக ஹூ சத்தம் எழுப்பமாட்டார்கள். நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. சமையல் எரிவாயுவிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் அரசு மீது அதிருப்தியில் உள்ளனர். மறுபுறத்தில் காஸ் வெடிப்பும் இடம்பெறுகிறது.

இவற்றுக்குத் தீர்வு வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அரசமைப்பின் 20 ஊடாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை அவர் பயன்படுத்த வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-5)

# மூன்று இடங்களில் விபத்தை ஏற்படுத்திய ஆட்டோ

## பொதுமக்களால் மடக்கிப் பிடிப்பு

(திருமலை)

திருகோணமலையில் ஒரு முச்சக்கர வண்டி மூன்று இடங்களில் விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச்செல்ல முயற்சித்த வேளையில் மின் கம்பத்துடன் மோதியதில் அறுவர் படுகாயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நகர பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் இடம்பெற்றது.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

திருகோணமலை டொக்யார்ட் வீதியில் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக நடந்து சென்ற ஒருவருடன் மோதி அங்கிருந்து தப்பிச் சென்ற முச்சக்கரவண்டி மீண்டும் திருகோணமலை பிரதான பேருந்து தரிப்பு நிலையத்திற்கு முன்பாக மோட்டார் சைக்களில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவருடன் மோதியதில் முச்சக்கர வண்டி கவிழ்ந்துள்ளது .

பொதுமக்களினால் முச்சக்கரவண்டியை நிமிர்த்தி எடுக்கப்பட்டதன் பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்ற முச்சக்கர வண்டி திருகோணமலை பிரதான வீதியில் மின் கம்பம் ஒன்றுடன் மோதிய நிலையில் பொதுமக்களினால் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ் விபத்தில் படுகாயமடைந்த அறுவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் முச்சக்கர வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 3 மாவட்டங்களில் அதிகளவு ஒமிக்ரோன் தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் கொழும்பு, கம்பஹா மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்தே ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரென விசேட மருத்துவ நிபுணர் மல்காந்தி கல் ஹேன தெரிவித்தார்.

இதன்படி, நாட்டின் மூன்று மாவட்டங்களில் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதிகரிக்கும் ஒமிக்ரோன் தொற்றுக் குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

"கடந்த இரு வாரங்களில் ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில், நாட்டில் இதுவரை ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளான 48 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒமிக்ரோன் தொற்றினால் ஏற்படும் ஆபத்து தொடர்பில் அறிந்து, சுகாதார அமைச்சினால் வெளியிடப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் செயற்பட வேண்டும்.

இத்தொற்றினால் முழு நாட்டையும் அபாயத்திற்கு உட்படுத்தும் வகையில் செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மருத்துவர் மல்காந்தி கல் ஹேன கேட்டுக்கொண்டுள்ளார். (நி-5)

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இன்று மீண்டும் மூடல்

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இன்று முதல் மீண்டும் மூடப்படவுள்ளது.

வெளிநாட்டுக் கையிருப்பு பற்றாக்குறை காரணமாக மசகு எண்ணெய் கொள்வனவு பாதிக்கப்பட்டுள்ளமையினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நாளாந்தம் 6,500 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்படுகிறது.

இந்நிலையில் டொலர் பற்றாக்குறை காரணமாக சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கடந்த நவம்பர் மாதம் 15 ஆம் திகதி தற்காலிமாக மூடப்பட்டு 22 நாட்களுக்குப் பின்னர் மீளத் திறக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்று மூடப்படவுள்ள சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இந்த மாத இறுதியில் மீளத் திறக்கப்படும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இந்த மாத இறுதியில் ஒரு தொகுதி மசகு எண்ணெய் நாட்டுக்குக் கிடைக்கப்பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டாலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது எனவும் கம்மன் பில தெரிவித்தார். (நி-5)

# சுற்றுலாத்துறை இயல்பு நிலைக்குத் திரும்பும் அமைச்சர் பிரசன்ன நம்பிக்கை

(கொழும்பு)

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்குள் சுற்றுலாத்துறை இயல்பு நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கின்றோம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் சுமார் ஒரு இலட்சத்திலிருந்து ஒரு இலட்சத்து 25ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்தனர் எனவும், அதில் 86 ஆயிரம் பேர் டிசெம்பர் மாதத்தில் மட்டும் வருகை தந்திருப்பது சிறந்த போக்கைக் பிரதிபலிக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# இராசிபலன்

03.01.2022
மார்கழி19, திங்கட்கிழமை
பிரதமை முன்னிரவு 10.43 மணிவரை

பூராடம் பிற்பகல் 3.21 மணிவரை
சுபநேரம் 12.30-2.00 மணிவரை
இராகுகாலம் 8.00-9.30 மணிவரை

சந்திராஷ்டமம்: ரோகினி, மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்:** ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**ரிஷபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர் நண்பர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, எடுத்த காரியங்களில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்:** உறவினர்களின் சந்திப்பால் உற்சாகம் பெறுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும், குடும்பத் தேவைகளில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** பக்க பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், குடும்ப நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு:** சவால்களை சமார்த்தியமாக சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**மகரம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், உறவினர்கள் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

அன்பு இல்லாத மனம் ஈரம் இல்லாத களிமண் போல் இறுகிப் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஐ கோருவதில் பயனில்லை

## சிறீதரன் எம்.பி வெளிப்படை



(யாழ்ப்பாணம்)

**கூட்டாட்சி தொடர்பில் சிந்தியுங்கள் என ஆறு ஆண்டுகளிற்கு முன்பே பாரதப் பிரதமர் நரேந்திர மோடி கூறிய நிலையில், நாம் இன்னும் 13ஐ கோரப் போகின்றோமா? என்ற பெரும் கேள்வி எழுந்துள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமரிற்கு அனுப்பும் ஆவணம் தொடர்பில் நேற்றைய தினம் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆம் திருத்தச் சட்டத்தால் எமக்கு எந்த முன்னேற்றமும் கிடையாது.

இந்தியா எப்போதும் இலங்கையை பூகோள ரீதியில் கரிசனையாக வைத்திருந்தாலும் ஆட்சி அதிகாரத்தில் இந்திய மாநில அதிகாரத்திற்கு மேலதிகமாக இருக்க கூடாது என்பதில் குறியாக இருக்கின்றது.


கூட்டாட்சி தொடர்பில் சிந்தியுங்கள் என ஆறு ஆண்டுகளிற்கு முன்பே பாரதப் பிரதமர் நரேந்திர மோடி கூறிய நிலையில், நாம் இன்றும் அந்த 13ஐ கோரப் போகின்றோமா என்ற பெரும் கேள்வி எம்மிடையே உள்ளது.

முதலில் எழுதிய வரைபில் சமஸ்டி வடிவில் எமது கோரிக்கைகளை உள்ளடக்கிய பல விடயங்கள் இருந்தன.

ஆனால் தற்போது இரண்டாவதாக எழுதிய வரைபில் பல விடயங்கள் நீக்கப்பட்டிருப்பதனால், தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு அதனை முழுமையாக நிராகரித்தது.

இந்தியாவின் கொல்லைப்புறம் வரையில் இன்னுமோர் நாடு வந்த பின்பும் அயல் நாட்டின் உள் விவகாரத்தில் தலையிட மாட்டோம் என இந்தியா தொடர்ந்தும் கூறப்போகின்றதா என்பதனை இந்தியாதான் சிந்திக்க வேண்டும்.

இதனால் வரைபு தொடர்ந்தும் தயாரிக்கும் பணியில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை என்பதே எம் நிலைப்பாடு. இந்த வரைபு சிறுபான்மையினரின் அபிலாசையினையோ தீர்வையோ கொண்டிருக்கவில்லை என்பதனை பகிரங்கமாக கூறுகின்றேன் என அவர் தெரிவித்தார்.(4-5-18)




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர்.கோபாலசுந்தரம் முகுந்தனால் படம் பிடிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்ட "URBAN BIRD WATCHER" எனும் ஆங்கில மொழியிலான நூல் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிடப்பட்டது.

(படம்- ரவிசாந்)

# சாவகச்சேரியில் கூடியளவு மழைவீழ்ச்சி பதிவு

(குப்பிழான்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை8.30 மணி முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை8.30 மணிவரையான 24 மணித்தியாலங்களில் சாவகச்சேரியில் கூடிய மழை வீழ்ச்சியாக 66.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப் பகுதியில் கிளிநொச்சி நகரில் 63.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 60.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 60 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 56.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், பருத்தித்துறையில் 57.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், ஆனையிறவில் 52.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டையில் 52.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (4-5-18)



பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் "ஆதாரம்" நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி நெல்லை முருகன் மணி மண்டபத்தில் இடம் பெற்றது. (படம்- மகாலிங்கம்)

# தொலைபேசிகள் திருட்டு சந்தேகத்தில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தை உடைத்து தொலைபேசிகள் திருடியவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் வாழைச்சேனையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர் திருடிய தொலைபேசிகளை விற்பனைக்கு கொடுத்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ். நகரிலுள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் கடந்த டிசெம்பர் 22 ஆம் திகதி இரவு திருட்டு இடம்பெற்றது.

அதுதொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் விற்பனை நிலையத்தில் பெறப்பட்ட சி.சி.ரி.வி பதிவுகளில் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.


யாழ்ப்பாணத் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் றில்ரோக் தலைமையிலான குழுவினர் கடந்த 31 ஆம் திகதி வாழைச்சேனை சென்று சந்தேக நபரைக் கைது செய்தனர்.

இதேவேளை சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட தொலைபேசிகளை விற்பனை செய்து கொடுத்த இருவரும் கைது செய்யப்பட்டதுடன் 6 தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டனர். (4-5-33)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு சுன்னாகம் மயிலணி திருக் குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ.சந்திரசேகரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)




EDUS நிறுவனத்தின் ஓராண்டு நிறைவு விழாவும், விருது வழங்கும் நிகழ்வும் நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில், யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (படம்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சியை நோக்கி செல்கிறதா இலங்கை?

## கலாநிதி தயான் ஜயதிலக

(கொழும்பு)

**புத்தாண்டில் இலங்கை அரசியல் மற்றும் கட்டமைப்புக்களில் இலங்கை இராணுவம் வகிக்கப்போகும் வகிபாகத்திற்கான ஆபத்துமிக்க சமிக்ஞைகள் வெளிப்பட்டுள்ளன என்று கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

1931 ஆம் ஆண்டிலிருந்து ஜனநாயக நாடாக அடையாளப்படுத்தி வரும் இலங்கையில் இராணுவம் வெளிப்படுத்தியுள்ள சமிக்ஞைகள் 2022 ஆம் ஆண்டு ஆபத்தான நிலைமைகளை நோக்கியதாக அமைந்துள்ளன.

புத்தாண்டை முன்னிட்டு இராணுவத்தினது நாட்காட்டியும், நாட்குறிப்பும் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்டவர்களுக்கு பகிரப்பட்டது.

இதில் இராணுவத்தளபதி ஜெனரல், சவேந்திர சில்வாவின் புகைப்படம் பொறிக்கப்பட்டு ஆங்காங்கே பல்வேறுபட்ட பொன் மொழிகளும் பழமொழிகளும் பதிப்புச் செய்யப்பட்டுள்ளன.

வழக்கமாக சார்லஸ் டிக்கன்ஸ், மார்ட்டின் லூதர் கிங் போன்றவர்களினது பொன்மொழிகளும் காணப்படும்.

ஆனால் வழக்கத்திற்கு மாறாக, "இலங்கை இராணுவமானது வளமான மற்றும் நிலையான தேசத்தை உருவாக்கி பராமரிக்கும் திறன் கொண்டது" என்ற வாசகம் பதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இவ்விதமான வாசகத்தினை இராணுவ மயமான மக்கள் சீனப் படையோ அல்லது ரஷ்ய இராணுவமோ கூட வெளிப்படுத்தியது கிடையாது.

அவ்வாறிருக்கையில், இலங்கை இராணுவம்முதன் முதலாக தேசத்தினை பராமரிப்பது உள்ளிட்ட விடயத்தினை குறிப்பிட்டுள்ளது.

இதுவரையில் இவ்விதமாக பிரஸ்தாபிக்காத இராணுவம் இப்போது தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதன் பின்னணியை கூர்ந்து அவதானிக்க வேண்டியுள்ளது.

அதைவிட கிளிநொச்சிக்குச் சென்ற இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அங்கு புதிதாக நிறுவப்பட்ட கோப்ஸ் கட்டமைப்பினரைச் சந்தித்தபோது பசுமை விவசாயத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கும் அது குறித்த விழிப்புணர்வுகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கும், இராணுவம் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளதோடு ஜனாதிபதி



கோட்டாபய ராஜபக்ஷவின் இலக்கினை நோக்கி நகர்வதற்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும் உரையாற்றயிருந்தார்.

இவ்விதமான நிலைமைகள் எல்லாம் அடுத்த ஆண்டு இராணுவம் எவ்விதமாகச் செயற்பட போகின்றது, அதன் வகிபாகம் என்ன என்ற சமிக்ஞைகளை தெளிவாக வெளிப்படுத்துவதாக உள்ளது. அதேநேரம், ஜனநாயக நாடொன்றில் இராணுவத்தின் இவ்விதமான பிரதிபலிப்புக்கள் மிகவும் ஆபத்தானவை என அவர் தெரிவித்தார். (நி-5)

## அரச பதவிக்காக காத்திருக்கமாட்டேன்

### -ஜனாதிபதியின் செயலாளர் ஜயசுந்தர-



(கொழும்பு)

அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் இனி ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர தெரிவித்தார்.

எதிர்வரும் 31ஆம் திகதி தாம் ஜனாதிபதியின் செயலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டதன் பின்னர் அரசாங்கத்தின் ஆலோசகர்பதவியையோ அல்லது வேறு அரச பொறுப்புக்களையோ ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

நான் வேலையில்லாப் பட்டதாரி கிடையாது என்பதனால் அரசாங்கத்திடம் பதவி ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருக்கப் போவதில்லை என அவர் தெரிவித்தார். (நி-5)

## இருளில் மூழ்கப் போகும் இலங்கை

### மின்சார சபையின் பொறியியல் சங்கத்தின் எச்சரிக்கை

(கொழும்பு)

அடுத்து வரும் வாரங்களில் நாட்டில் மின்சார நெருக்கடி ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் பொறியியல் சங்கத்தின் செயலாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை நீண்ட கால திட்டங்களை நடைமுறைப்படுத்தாததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மின் நெருக்கடியை தவிர்ப்பதற்காக மின் பொறியியலாளர்களால் முன்வைக்கப்பட்ட குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் இந்த மின்சார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)


**வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT)**

**அமைய ஊழியர் ஆட்சேர்ப்பு**

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், இலங்கை சோசலிசக் குடியரசின் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும்.

இந்நிறுவனத்திற்கு பின்வரும் தகைமையுடைய வடமராட்சியில் நிரந்தரமாக வசிக்கும் 30-45 வயதிற்குட்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி நிலை:-** முகாமையாளர்

**தகைமைகள்:-**

1. க.பொ.த. (உயர்தரம்- வர்த்தகப்பிரிவு) சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட
2. நுண்நிதி மற்றும் சமூக சேவையில் அனுபவம்
3. ஆங்கில அறிவு, கணனி அறிவு
4. மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம்
5. ஏனைய தகைமைகள்

**சேவையின் தன்மை:** கிராம அமைப்புக்களுடனும் மக்களுடனும் சமூக அணி திரட்டும் ஆற்றலை மேம்படுத்தும் திறன், பேச்சாற்றல், தொடர்பாடல், ஆவணப்படுத்தல், அறிக்கை சமர்ப்பித்தல் எனும் திறனைக் கொண்டிருத்தல்.

விண்ணப்பதாரி தமது சுய விபரக்கோவையுடன் விண்ணப்பங்களை **தலைவர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT), அல்வாய் கிழக்கு, அல்வாய்** என்ற முகவரிக்கு 18.01.2022 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.


**வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT),**
**அல்வாய் கிழக்கு, அல்வாய்.**

(C-3398)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம் / வெளிநாடு

## 5 கின்னஸ் சாதனைகளை படைத்த அமீரகத்தின் புத்தாண்டு வாண வேடிக்கை




(அபுதாபி)

ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி மற்றும் ராசல் கைமா பகுதிகளில் புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் நடை பெற்ற பிரம்மாண்ட வாண வேடிக்கை நிகழ்ச்சிகள் உலக சாதனையாக பதிவாகியுள்ளன.

பிரமாண்ட வாண வேடிக்கை மற்றும் 2020 ட்ரோன்களை பயன்படுத்தி நடைபெற்ற கண்கவர் காட்சி நிகழ்ச்சிகளுக்கு 5 கின்னஸ் சாதனை விருதுகள் கிடைத்தன.

அபுதாபியின் அல் வாத்பா பகுதியில் நடைபெற்ற கண்கவர் வாணவேடிக்கை நிகழ்ச்சி இடைவிடாமல் தொடர்ந்து 40 நிமிடங்களுக்கு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## அமெரிக்காவில் காட்டுத் தீ ஆயிரம் வீடுகள் தீக்கிரை



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தில் மிக வேகமாகப் பரவிவரும் காட்டுத் தீயினால், பல்லாயிரக் கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். மற்றும் கிட்டத்தட்ட 1,000 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.

டென்வரின் வடக்கே உள்ள போல்டர் கவுண்டியில் வேகமாகத் தீ பரவி வருவதாக ஆளுநர் ஜெரெட் போலிஸ் தெரிவித்தார்.

லூயிஸ்வில்லி மற்றும் சுப்பீரியர் நகரங்களில் உள்ள சுமார் 30,000 பேர் கடந்த வியாழக்கிழமை தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுமாறு கூறப்பட்டனர். அத்துடன் அங்கு அவசர நிலைப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மணிக்கு 169 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் காற்று, வரலாற்று வறட்சிக்கு மத்தியில் இப்பகுதி முழுவதும் காட்டுத்தீயை உருவாக்க வழிவகுத்துள்ளது.

மார்ஷல் ஃபயர் மற்றும் மிடில் ஃபயர் என்று பெயரிடப்பட்ட இந்த தீ விபத்து, விரைவில் மாநிலத்தின் நவீன வரலாற்றில் மிகவும் அழிவுகரமான காட்டுத் தீயாக மாறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு வட அமெரிக்காவில் காட்டுத் தீ சமீப வருடங்களில் மிகவும் உக்கிரமடைந்துள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (நி-5)

## பட்டாசு ஆலையில் வெடி விபத்து நான்கு பேர் உடல் கருகி உயிரிழப்பு

### புத்தாண்டு தினத்தில் சிவகாசியில் சோகம்

(சென்னை)

சிவகாசி அருகே உள்ள மேட்டுப்பட்டி கிராமத்தில் உள்ள பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 4 பேர் உடல் கருகிப் பலியாகினர். ஆலையில் 10இற்கும் மேற்பட்ட அறைகள் உள்ளன. அதில் 6 அறைகள் வெடிவிபத்தில் தரை மட்டமாகியுள்ளன.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் பட்டாசு ஆலையில் வழக்கம்போல் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. வெடி மருந்தை செலுத்தும்போது ஏற்பட்ட உராய்வின் காரணமாக வெடி விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

புத்தாண்டு தினத்தன்று பட்டாசு ஆலையில் ஏற்பட்ட இந்த வெடி விபத்து அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-5)

## கருணைக் கொலையை அனுமதித்தது ஆஸ்திரியா

(வியன்ன)

கடுமையான நோய்வாய்ப்பட்டு இயலாத நிலையில் உள்ளவர்களை அவர்களின் சுயவிருப்பின் பேரில் கருணைக் கொலை அனுமதிக்கும் சட்டம் ஆஸ்திரியாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது.

தீவிர நோய்வாய்ப்பட்ட அல்லது நிரந்தர பலவீனமான நிலையில் உள்ள வயோதிபர்களை அவர்களது விருப்பின் பேரின் கருணைக் கொலை செய்ய இதன் மூலம் வழி ஏற்பட்டுள்ளது.

இறுக்கமான நடைமுறைகளின் கீழ் ஒருவர் உயிரை மாய்த்துக் கொள்ளும் நடைமுறை ஒழுங்குபடுத்தப்படும். உயிரை மாய்த்துக்கொள்ள செய்யப்படும் விண்ணப்பங்கள் இரண்டு மருத்துவர்களால் மதிப்பிடப்படும். அந்த இரு மருத்துவர்களில் ஒருவர் நோய்த் தடுப்பு மருந்து நிபுணராக இருக்க வேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிர்வாழ்வதற்கான வாய்ப்புள்ள ஒருவர் தன்னைக் கருணைக்கொலை செய்ய விண்ணப்பம் செய்தால் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, அவருக்கான குணமாக்கல் சிகிச்சைகளுக்கான நிதி உதவிகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளும்.

எனினும் புதிய விதிகள் மூலம் சிறார்களோ அல்லது மனநிலை பாதிக்கப்பட்டவர்களோ தற்கொலை செய்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்பும் ஒருவர் மீள முடியாத நோய் நிலையால் அவதிப்படுபவர் என்பது மருத்துவ ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களால் சுயமாக முடிவெடுக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இரண்டு மருத்துவர்களிடம் இருந்து ஒப்புதல் பெற்ற பின்னர் தங்கள் முடிவு குறித்து சிந்திக்க நோயாளிகளுக்கு 12 வாரங்கள் அவகாசம் வழங்கப்படும்.

இந்த காத்திருப்பு காலத்திற்குப் பிறகும் அவர்கள் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தால் உரிய மருந்துகளுடன் கருணைக் கொலை செய்ய முடியும்.

துஷ்பிரயோகத்தை தடுக்க இந்த மருந்துகளை விற்கும் மருந்தகங்களின் பெயர்கள் வழக்கறிஞர்கள் மற்றும் சட்டத்துறை சார்ந்தவர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படும். அவை பொதுவில் விளம்பரப்படுத்தப்படாது எனவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே எனது இலக்கு- வடகொரிய ஜனாதிபதி

(பியாங்யாங்)

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே இந்த ஆண்டு தேசிய முன்னுரிமையாக இருக்கும் என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்தார்.

கிம் ஜாங் உன் ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், ஆளுங்கட்சியின் முக்கிய கூட்டத்தின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் ஒருபுறம் இருக்க வடகொரியாவில் தொடர்ந்தும் உணவுத் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இந்நிலையில் வளர்ச்சியை அதிகரிப்பதும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும் முக்கிய பணி என கிம் ஜாங் உன் தெரிவித்தார்.



மக்களுக்கான உணவு, உடை மற்றும் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் அதே நேரம் கொரோனாத் தொற்றினை எதிர்த்துப் போராடுவதும் இந்த ஆண்டின் முக்கிய குறிக் கோள்களில் ஒன்றாகும் என அவர் தெரிவித்தார்.

இதேநேரம் அவரது உரையில் அமெரிக்கா அல்லது தென் கொரியா பற்றி நேரடியாக எந்த கருத்தையும் குறிப்பிடப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கான

# மருத்துவ தேவைகள் வீடுகளுக்கு வந்து பூர்த்தி செய்து தரப்படும்

### கிளிநொச்சியில் விசேட வேலைத்திட்டம் ஆரம்பம்

(முறிகண்டி)

**கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் மருத் துவ குழுவினர் நேற்று முன்தினம் 1 ஆம் திகதி முதல் நாட்பட்ட நோயாளர்கள் மற்றும் படுக்கை நோயாளிகளாக உள்ளோருக் கான மருத்துவ தேவைகளை அவரவர் வீடு களிற்கு சென்று பூர்த்தி செய்யும் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.**

குறித்த சேவையை பெற்றுக்கொள்ள விரும்புவோர் 0212283037 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சுகந்தன் தெரிவித்தார்.

குறித்த நடமாடும் சேவை பொன்னகர், பாரதிபுரம், மலையாளபுரம், விவேகான ந்தா நகர், கிருஸ்ணபுரம், உதய நகர் கிழக்கு, உதயநகர் மேற்கு, அம்பாள்குளம், ஆனந்தபுரம், தொண்டமான் நகர், கனகாம்பிகைக்குளம், அம்பாள் நகர், திருவையாறு, திருவையாறு மேற்கு, இரத்தினபுரம், கிளிநொச்சி நகர், மருதநகர், பன்னங்கண்டி, கனகபுரம், திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, கணேசபுரம், ஜெயந்திநகர், பெரிய பரந்தன் ஆகிய கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த சேவையை செல்வபுரம், இந்துபுரம், வசந்தநகர், முறிகண்டி ஆகிய முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களிற்கும் விஸ்தரிக்குமாறும், குறித்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-100)

# மரணித்த இளைஞனுக்கு நீதிகோரி வீதியை மறித்துப் போராட்டம்



(குருமன்காடு)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மரணித்த இளைஞனுக்கு நீதி கேட்டு ஏ-9 வீதியை மறித்து போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

மரணித்த முச்சக்கரவண்டி சாரதியான இளைஞனின் உறவினர்கள், நண்பர்கள் இணைந்து நேற்று முன்தினம் இரவு குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.


வவுனியா, ஏ-9 வீதி தாண்டிக்குளத்தில் பிக்கப் ரக வாகனமும், முச்சக்கர வண்டியும் மோதியதில் வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

விபத்துக்குள்ளாகிய வாகனத்தை ஏற்றவிடாது வாகனத்தை முற்றுகையிட்டும், ஏ9 வீதியை மறித்தும் மரணித்த இளைஞரின் உறவினர்கள், நண்பர்கள் இரவு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களது போராட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து நடவடிக்கை எடுத்ததையடுத்து அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டதுடன், முறுகல் நிலை தீவிரமடைந்தது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், மரணித்த இளைஞனுக்கு நீதி கிடைக்கும், சரியான முறையில் விசாரணை இடம்பெறும் என குறித்த இளைஞனின் தாயார் மற்றும் உறவினர்களுக்கு வாக்குறுதி அளித்ததுடன், போராட்டம் கைவிடப்பட்டது. (4-5-250)

# காட்டு யானைகள் அட்டகாசத்தால் நெற்செய்கைகள் அழிவு



(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கைகளை காட்டு யானைகள் அழித்து வருவதாகவும் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் வன்னேரிக்குளம் விவசாயிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக பயிர்ச்செய்கைகளை காட்டு யானைகள் தொடர்ச்சியாக அழித்து வருகின்றன.

நாளாந்தம் மாலை வேளையில் குறித்த பிரதேசங்களுக்கு வருகின்ற பெருமளவான காட்டு யானைகள் இவ்வாறு நெற்பயிர்களை அழித்து வருகின்றன.

அத்துடன் குடியிருப்பு காணிகளிலும் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவித்தனர்.

வன்னேரிக்குளம் பகுதியில் யானை வேலிகளை அமைத்துத் தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துள்ளபோதும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் குறித்த பிரதேசங்களுக்கு யானை வேலிகளை விரைவாக அமைத்துத் தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)

# சௌபாக்கியா உற்பத்தி கிராமம் திறந்து வைப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான் கிராமத்தில் 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மக்களின் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் உள்ளடங்கலாக அமைக்கப்பட்ட சௌபாக்கியா உற்பத்திக் கிராமம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக தேங்காய் எண்ணெய், உழுந்து, அரிசி மா, ஒடியல் மா மற்றும் பால் சார் உற்பத்திப் பொருட்கள் போன்ற உள்ளூர் மூலப் பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கிலும், உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கான சிறந்த முறையில் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கிலும் குறித்த நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (4-5-315)

# வர்த்தக நிலையத்தில் தீப்பரவல்



(முறிகண்டி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கனகபுரம் வீதியில் உள்ள சேவியர் கடை சந்தியில் அமைந்துள்ள பிரபல கட்டடப் பொருள் விற்பனை செய்யப்படும் வர்த்தக நிலையத்தில் நேற்றுக்காலை தீப்பரவல் ஏற்பட்டது.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவினரும் பொதுமக்களும், இணைந்து சுமார் 2 மணி நேரத்தில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மின்னொழுக்கினால் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (4-5-100-271-316)

### உவர்நீர் தடுப்பணை இன்மையால்

# உவர் நிலங்களாக மாறும் வயல் நிலங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் சுமார் 16 கிலோமீற்றர் வரையான கரையோரப் பகுதிகளில் உவர்நீர்த் தடுப்பணையின்மையால் பெருமளவான வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறி வருவதாகவும் உவர்நீர்த் தடுப்பணை அமைத்து தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேசத்திலுள்ள கரையோரப் பகுதிகளில் உவர்நீர் தடுப்பணைகள் இல்லாத காரணத்தினால் கடல்நீர் உட்புகுந்து பெருமளவான வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாற்றமடைந்து வருகின்றன.

குறிப்பாக ஆரம்ப காலத்தில் இருந்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த காணிகள் இவ்வாறு உவர் நிலங்களாக மாறி இருப்பதாகவும் விவசாயிகள் சுட்டிக்கட்டியுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இவ்வாறு உவர் பரம்பலுக்கு உள்ளாகி வருவதாகவும் சுட்டிக்காட்டியதுடன் தங்களுடைய பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் சுமார் 16 கிலோமீற்றர் நீளமான பகுதி கடற்கரையோரப் பகுதிகளாக காணப்படுகின்றது என்றும் இப் பகுதிகளுக்கு உவர் நீர்த் தடுப்பணைகளை விரைவாக அமைத்துத் தருமாறும் கோரியுள்ளனர். (4-5-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரப்பத்தனை நகரத்திலும் விக்கிரகங்கள் உடைப்பு



(நுவரெலியா)

அக்கரப்பத்தனை நகரத்தில் உள்ள ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தின் விக்கிரகங்கள் மற்றும் சிலைகள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் என நகர வாசிகள் தெரிவிக்கின்றனர்.

அக்கரப்பத்தனை நகரத்தில் இதுவரை காலமாக ஆலயம் ஒன்று இல்லாத நிலையில் புதிதாக புனரமைக்கப்பட்ட குறித்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலேயே இவ்வாறு சிலைகள் மற்றும் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆலயத்தில் இம் மாதம் 19ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## வாழ்வில் இன்பம் சேர்க்கும் ஸ்ரீ ஐயப்பன் விரதம்



கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ ஐயப்பன். சரணம் ஐயப்பா என மனதார துதிக்கும் பக்தர்களுக்கு அவர் சாந்தியும் பேரின்பமும் அருள்கிறார். ச என்ற எழுத்து விரோதிகளை அழிக்கக்கூடியது. ர என்ற எழுத்து ஞானத்தை அருள்கிறது. ண என்ற எழுத்து சாந்தம் அளிப்பது. சுவாமியே சரணம் என்று அடிவயிற்றில் இருந்து நாம் எழுப்பும் ஒலியானது சக்தி, ஞானம், சாந்தம் ஆகிய மூன்றையும் தருகிறது.

### அவதார வரலாறு

சுவாமி ஐயப்பன் அவதார வரலாறு தெய்வாம்சம் மிக்கது. மும்மூர்த்திகளில் முதல்வரான சிவபெருமானை நோக்கி கடும் தவம் புரிந்தான் பத்மாசூரன் என்ற கொடிய அரக்கன் அவன் தவத்தை மெச்சிய சிவபெருமான் அவன் முன்தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டான்.

அதற்கு அரக்கன் சிவபெருமானை எவர் தலை மீது நான் கையை வைத்தாலும் அவர் அக்கணமே எரிந்து சாம்பலாக வேண்டும். அந்த வரத்தை எனக்குத் தந்தருள வேண்டும் என்று கேட்டான். சிவபெருமானும் அரக்கன் கேட்ட வரத்தை தந்தருளினார். அரக்கன் பத்மாசூரன் மனதில் ஒரு வினோத எண்ணம் தோன்றியது.

வரம் தந்த சிவனிடமே வரத்தின் மகிமையை சோதித்துப் பார்க்க எண்ணினான். இதையடுத்து பத்மாசூரன் சிவபெருமான் தலை மேல் கை வைக்க முயன்றான்.

இந்த விபரீத நிலையை எதிர்பாராத சிவன் அவனுக்கு பயந்து ஓடி ஒளிந்து கொண்டார். இதை அறிந்த திருமால் மோகினி வடிவில் அந்த அரக்கனை மயக்கி அவனைத் தன் தலை மேலே தன் கையை வைக்கும் படி செய்து பத்மாசூரனை சாம்பலாக்கினான்.

இதைத் தொடர்ந்து சிவபெருமான் மோகினி வடிவில் இருந்த திருமாலின் அழகில் மயங்கி மோகம் கொண்டார்.

இதன் விளைவாக ஐயப்பன் அவதாரம் நிகழ்ந்தது. அக்குழந்தைக்கு பிரம்மன் தர்மசாஸ்தா என்ற பெயர் சூட்டினார். சிவபெருமான் அக்குழந்தைக்கு தன் கழுத்தில் இருந்த மணி மாலையை அணிவித்து அக் குழந்தை பிறப்பதற்கான காரணத்தை எடுத்துக் கூறி பம்பை நதிக்கரையில் விட்டு மறைந்தார்.

அக்குழந்தை தான் சபரி மலை வாசனாகிய ஐயப்பன் எனும் மணி கண்டன். ஸ்ரீ ஐயப்பா அவதாரத்தின் முக்கிய நோக்கமே பிரம்மனிடம் வரம் பெற்ற மகிஷியை அளிப்பது தான். பந்தல நாட்டை நீதி நெறியுடன் ஆட்சி செய்து வந்தான் மன்ன ராஜசேகரன். சிறந்த சிவபக்கதரான அவர் தனக்கு பிள்ளை இல்லாத குறையைத் தீர்க்கும்படி சிவனிடம் வேண்டினார்.

அவர் ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாட சென்றார். பம்பை நதிக்கரைக்கு அருகில் குழந்தை அழும் சத்தம் கேட்டு அங்கு சென்றார்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த பொருட்கள் தமிழகத்தில் சிக்கின

(சென்னை)

இலங்கைக்கு கடத்துவதற்காக தமிழகத்தில் மண்டபம் அருகே வீட்டில் பதுக்கி வைத்திருந்த சுறா இறகு, கடல் அட்டைகள், மஞ்சள் கட்டி மூடைகள் உள்ளிட்ட ஒரு கோடியே 20 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் சிக்கியிருப்பதாக தமிழக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

## கடலில் நீராடச் சென்ற இளைஞர்கள் இருவர் பலி, ஒருவரை காணவில்லை

### புத்தாண்டு தினத்தில் சோகம்

(கொழும்பு)

நீர்கொழும்பு - கெபுனுகொட கடலில் நீராடச் சென்ற ஐந்து இளைஞர்களை கடல் அலை அடித்துச் சென்ற சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் இளைஞர்களில் ஒருவர் காணாமல் போயுள்ளதுடன் எஞ்சிய நால்வரும் காப்பாற்றப்பட்டு, நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

அம்பேவல பகுதியைச் சேர்ந்த 21 வயதான இளைஞர் ஒருவரே சம்பவத்தில் காணாமல் போயுள்ளதுடன், அவரை தேடும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. (நி-5)

## மூன்று பிள்ளைகளின் தாய் சடலமாக மீட்பு

(தலவாக்கலை)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தில் உள்ள மீன் வளர்ப்பு நீர்த்தேக்கத்தில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகத் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்ட வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான கந்தையா ரமணி என அடையாளம் காணப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 340 | 300 | 260 | 320 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 180 |
| பச்சைமிளகாய் | 900 | 1000 | 800 | 1000 |
| தக்காளி | 260 | 220 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 | 50 |
| கோவா | 320 | 340 | 340 | 400 |
| கரட் | 450 | 460 | 500 | 600 |
| பூசணி | 80 | 70 | 50 | 100 |
| புடோல் | 320 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 80 | 70 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 220 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 160 | 180 |
| பாகற்காய் | 550 | 500 | 350 | 600 |
| வெண்டிக்காய் | 260 | 180 | 180 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 350 | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 320 | 340 | 320 | 400 |
| பீற்றூட் | -- | -- | -- | -- |
| கறிமிளகாய் | 650 | 650 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | -- | -- | -- |
| போஞ்சி | 280 | 220 | 320 | 320 |
| கத்தரிதம்புள்ள | 320 | 250 | 280 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 40 | 80 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 280 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 50 | 50 |
| வல்லாரை | 25 | 32 | 10 | 40 |
| ஈரப்பலா | 80 | 90 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய் பாதிப்பால் கடந்த வருடம் 27 பேர் மரணம்

(கொழும்பு)

**இலங்கையில் கடந்த ஆண்டு டெங்கு நோய் காரணமாக 27 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

அதேநேரம், கடந்த ஆண்டு 19 ஆயிரத்து 87 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## வேலை வாய்ப்பிற்காக

# ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் நாட்டை விட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டில் சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் இலங்கையர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக நாட்டைவிட்டு வெளியேறியதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று நோய்க்கு மத்தியிலும் இவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-5)

# இந்த வருடமும் கொவிட்டுடன் வாழ வேண்டிய அவலம்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டிலும் கொவிட் வைரஸுடன் வாழ வேண்டிய நிலைமை ஏற்படும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

நாட்டில் புதிதாக 41 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாட்டில் நூற்றுக்கு 12 வீதம் ஒமிக்ரோன் அவதானமே உள்ளதென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் பூஸ்டர் தடுப்பூசியை தவிர்ப்பது, நாட்டில் கொவிட் சுனாமி ஏற்படுத்த வழி அமைக்கும் நடவடிக்கை என சுகாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

கொவிட் தொற்று முடிவுக்கு வராது. கொவிட் தொற்றுடனேயே வாழ வேண்டியுள்ளது. இந்த வருடம் ஆரம்பிக்கும் போதே ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விசேடமாக பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தொற்று வேகமாக பரவியுள்ளது. தெற்காசியாவிலும் அவ்வாறான பாதிப்பு ஒன்று எதிர்வரும் காலங்களில் ஏற்படும்.

டெல்டா பரவிய சந்தர்ப்பத்திலும் இதே முறை காணப்பட்டது. பூஸ்டர் தடுப்பூசி மாத்திரமே ஆபத்தை தவிர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# போலி இணையத்தளம் குறித்து எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்

## சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை விசாக்களை வழங்கும் பயண மற்றும் குடிவரவு முகவர் என கூறி இணையத்தில் காணப்படும் போலி தளங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை விடுத்துள்ள அறிவிப்பில் வலியுறுத்தியுள்ளது. அதேநேரம் eta.gov.lk/slvisa என்பது இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதற்கான விசா நோக்கங்களுக்கான ஒரே அதிகாரப்பூர்வ இணைத்தளம் என்பதை மீண்டும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை சுட்டிக் காட்டியுள்ளது.

கொவிட் தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறையை மேம்படுத்த இலங்கை போராடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# எரிவாயு தட்டுப்பாடு நீங்க 3 வாரங்கள் தேவை

## லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

சமையல்எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

நாட்டில் தற்போது [illegible] விற்கு நிலவும் தட்டுப்பாடு [illegible] குவதற்கு மேலும் மூன்று வாரங்கள் செல்லும் என லிட்ரோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சந்தையில் காணப்படும் சிலிண்டர்களை மீள பெற்றுக்கொள்ளல் மற்றும் புதிய தரப்படுத்தல் செயற்பாடுகளால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக நிறு[illegible] தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அகமும் புறமும்

எனக்கு அழகான கணவன் தான் வேண்டும். மற்றவற்றைப் பற்றி எனக்குக் கவலையில்லை என்று எந்தப் பெண்ணும் கூறுவதில்லை. இது ஆராய்ச்சிபூர்வமான உண்மை.

ஆனால், ஆண்கள் அப்படியா? நூற்றுக்கு 90 சதவிகிதம் பேர் அழகைப் பற்றித்தான் அக்கறை கொள்கிறார்கள்.

குணம் நிறைந்தவனாய், ஒழுக்கம் உள்ளவனாய், ஓரளவு கல்வியறிவு உடையவனாய் இருப்பவன் தன் கணவனாய் அமைய வேண்டும் என்றே பெண்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் ஆண்கள்? அழகாயிருந்தால் போதும், தலையாட்டி விடுகிறார்கள். அப்புறம் வாழ்வு முழுவதும் தலைவிதியே என்று நொந்து கொள்ளுகிறார்கள். எனக்கு அழகான மனைவி அமைய வேண்டும் என்று ஓர் ஆண் விரும்புவதில் தவறில்லை. ஆனால் மற்ற அம்சங்களையும் கவனிக்க வேண்டுமல்லவா?

கண்கள் இப்படி இருக்க வேண்டும். உடல் வாகு இப்படி இருக்க வேண்டும்; நிறம் சிவப்பாய் இருக்க வேண்டும் என்றெல்லாம் கற்பனை மனைவியை உருவகம் செய்து வைத்துக் கொண்டு, முடிவில் ஏமாந்து போகிறார்கள்.

இது எவ்வளவு பெரியதவறான கோட்பாடு? நமக்கு மனைவியாய் வரப்போகிறவள் குலப் பெருமையையும் குடும்ப கௌரவத்தையும் காப்பாற்றுகிறவளாக அமைய வேண்டும்; அன்பும் அக்கறையும் பண்பும் பாசமும் நிறைந்தவளாய், பெற்ற குழந்தைகளை இலட்சிய நோக்குடன் வளர்ப்பவளாய் அமைய வேண்டும், என்றெல்லாம் விரும்ப வேண்டும். இந்தக் கோணத்தை மனத்தில் கொண்டு பெண்ணைப் பற்றி நன்கு விசாரித்துத் தெரிந்து கொண்ட பின்னரே முடிவுக்கு வரவேண்டும். இவ்வளவும் அமையப்பெற்ற ஒரு பெண் அழகானவளுமாக இருந்து விட்டால், அவளை மணந்துகொள்ளப் போகிறவன் கொடுத்து வைத்தவன் என்பதில் சந்தேகமில்லை.

வெளியில் கூட்டிச் செல்லும்போதும், நான்கு பேர் முன்னிலையில், இவள் தான் என் மனைவி என்று சொல்லும் போதும், என் மனைவி அழகு என்ற பெருமை ஒருவருக்கு தலை தூக்கலாம்.

ஆனால், சிறுநேரப் பெருமையைவிட, நாள்தோறும் அவளது ஒவ்வொரு நற்செயலிலும் வெளிப்படும் உயரிய பண்பைக் கண்டு, ஆகா! இவளை மனைவியாக அடைய நாம் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று ஒவ்வொரு நிமிடமும் ஒரு கணவனால் எண்ணி மகிழ்ச்சி அடைய முடியுமானால், அதுவே பெருமைக்குரிய அம்சமாக இருக்கும்.

இல்லற வாழ்வில் சிறு சதவிகிதமே இடம் பெறும் அந்த ஆசைக்கு மட்டுமே மனைவி அல்ல. மேலும் வெளித் தோற்றத்திற்கு மட்டுமே மனைவி அல்ல.

அழகு அழகு என்று மட்டுமே அலைந்து அதில் மட்டும் வெற்றி கண்ட ஆண்கள் அணு அணுவாகச் சித்திரவதைக்கு ஆளாகி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் தினமும் காண்கிறோம்.

புற அழகு வெறுத்துவிடும் சலித்துவிடும். ஒரு சிறு விபத்து ஏற்பட்டால் சிதைந்து போய்விடும். ஆனால் அக அழகு அனைவராலும் போற்றக் கூடியதாக இருக்கும். அதோடு நிம்மதியான வாழ்வுக்கு நிலைப்படியாய் அமையும்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## கோபக்கார முனிவர்



பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், ஒரு காட்டில் சுதீவர் என்ற முனிவர் கடுந்தவம் செய்து வந்தார்.

அந்தப் பக்கம் வந்த இரு காட்டுவாசி களில் ஒருவன், திடீரென மயக்கம் அடைந்து கீழே விழுந்து விட்டான்.

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்த மற்றொருவன், தவத்திலிருந்த முனிவரை எழுப்பி உதவி கேட்டான்.

தன் தவம் கலைந்த கோபத்தினால் முனிவர் காட்டுவாசியை சாம்பலாகப் போகும்படி சபித்தார்.

அந்தக் கணமே அந்தக் காட்டு வாசி எரிந்து சாம்பலாக, மயக்கம் தெளிந்து எழுந்த மற்றொருவன் தனது சகாவின் நிலையைக் கண்டு கதறி அழுதான்.

இதற்குள் கோபம் தணிந்த முனிவரிடம், மற்றொரு ஆள் சாபத்தை நீக்குமாறு வேண்ட, "எனக்கு சாபம் கொடுக்கத் தெரியுமே தவிர, சாபத்திலிருந்து மீட்கத் தெரியாது.

நான் என் குரு சுசாந்தரிடம் அதைக் கற்று வருகிறேன். நீ அதுவரை உன் நண்பனின் சாம்பலை பத்திரமாகப் பாது காத்து வா!" என்று சொல் லிவிட்டு தன் குருவைத் தேடிச் சென்றார் சுதீவர்.

தன் குருவிடம் சென்று நடந்தவற்றை விளக்கி பரிகாரம் கேட்டார் குரு சுசாந்த முனிவர்.

"மனிதனின் முதல் விரோதி அவனது கோபம் தான். நீ கொடுக்கும் சாபத்தினால் உன் தவ வலிமை குறைந்து விடும். உன் தவவலிமை முழுதும் தியாகம் செய்தால் உன் சாபத்தைத் திரும்பப் பெறலாம்!" என்றார். அதற்கு இணங்காமல் வேறு யோசனை சொல்லும்படி கேட்டார்.

"சுதீவா! விஷ்ணு புரத்தில் மாதவன் என்ற புண்ணியாத்மா இருக்கிறான். அவன் இல்லறத்தில் இருப்பவன்.

அவனிடம் சென்று அவன் புண்ணியத்தில் ஒரு பகுதியை தானமாகப் பெற்றுக்கொள். அதைக் கொண்டு அந்தக் காட்டுவாசியை உயிர்ப்பிக்கலாம்!" என்றார்.

சுதீவர் அந்த மாதவனைத் தேடிச் சென்றார். செல்லும் வழியில் மிக அழகான ஒரு இளம் பெண் தென்பட்டாள்.

அவள் அழகிலே கிறங்கிப்போய் அவளையே உற்றுப்பார்க்க, அதனால் கோபமடைந்த அந்தப் பெண், "முனிவரான நீ என் போன்ற பெண்ணை இப்படி உற்றுப் பார்க்கலாமா? உனக்கு வெட்கமாக இல்லையா?" என்று கேட்டதும், சுதீவருக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று.

"அடி பெண்ணே! உன் அழகினால் தானே உனக்கு இவ்வளவு கர்வம்? நீ அழகற்ற அவலட்சணமான பெண்ணாக மாறுவாய்!" என்று சபிக்க அந்தப் பெண்ணும் அவ்வாறே மாறி விட்டாள். பிறகு சுதீவர் விஷ்ணுபுரத்தை அடைந்தார். வழியில் ஒரு இளைஞனிடம் மாதவனது வீட்டுக்கு வழி கேட்டார்.

(தொடரும்)

# மகாபாரதம்




ஒரு சமயம், அவர் யாகம் செல்ல வேறிடம் செல்ல நேர்ந்தது. அதுவரை தன் பத்தினியை பாதுகாப்பது எப்படி எனச் சிந்தித்தார்.

தவ வலிமை மிக்க தன் சீடர் விபுலரை அழைத்தார். "நீர்தான் என் துணைவியைக் காக்க வேண்டும். இந்திரனுக்கு இவளிடம் ஆசை உள்ளது.

இவளை அடைய துடித்துக் கொண்டிருக்கிறான். அவன் எத்தகைய மாய உருவங்களையும் எடுத்து வருவான். சாதுவாகவும் இருப்பான். சண்டாளனாகவும் இருப்பான்.

புலி போல சீறுவான். பூனையாயும் இருப்பான்.. பறவையாகவும் திரிவான். அவன் எவ வடிவத்தில் வருவான் என யாருக்கும் தெரியாது. உன் சாமர்த்தியத்தால் எப்படியேனும் இவளைப் பாதுகாக்க வேண்டும்" என்றார்.

இதைக் கேட்ட விபுலர், "இவளை எப்படிக் காப்பது?" எனக் கவலையுற்றார். யாரையும் அருகே நெருங்கவிடாது காத்தார். ஆயினும் அச்சம் அவருக்கு இருந்தது.

இந்திரன் காற்று வடிவத்தில் கூடக் கதவு இடுக்கில் நுழைந்து விடுவான். மாயையில் வல்ல அவனைத் தடுக்க ஒரு வழிதான் உண்டு. என் தவத்தின் வலிமையால் இவளைக் காக்க முடியும்.

தனது கண் பார்வையால் அவளது கண் பார்வை மூலம் சக்தியை அவள் உடல் எங்கும் செலுத்தி அவளை அசைக்க முடியாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என உறுதி கொண்டார்.

அவ்வாறே தன் பார்வையுடன் அவள் பார்வையையும் கலக்குமாறு செய்து தன் சக்தியை அவள் உடலுக்குள் செலுத்தி, இந்திரன் அவளை அடைய முடியாதவாறு செய்து விட்டார். இப்படி விபுலர் தன் குரு வரும் வரை அவருடைய பத்தினியைக் காத்தார்.

இவ்வாறு சீடர் தம் குரு பத்தினியைக் காத்து வரும் நேரம் ஒருநாள் இந்திரன் பேரழகுடன் ஆச்சிரமத்திற்குள் வந்தான்.

"ருசி" யின் அழகுக் கண்டு பரவசமுற்று, இனிய சொற்களைக் கூறினான். தன்னிடம் வருமாறு வலியுறுத்தினான்.

விபுலரின் தவ வலிமையால் குரு பத்தினி கட்டுண்டு கிடந்தாள். இருந்த இடம் விட்டு நகரவும் முடியவில்லை, பேசவும் நா எழவில்லை. விபுலரின் இச்செயல் கண்டும் அவரது தவ வலிமை கண்டும் இந்திரன் அச்சம் அடைந்தான்.

"முன்னர் அகலிகை மீது கொண்ட மோகத்தால் அடைந்த அவமானத்தை மறந்து விட்டாயா? என் குரு வந்து சபிப்பதற்கு முன் போய்விடு" என்று பேரொலி இந்திரன் காதில் விழ, அது விபுலரின் குரல் என இந்திரன் அறிந்தான். அங்கிருந்து மறைந்தான்.

தேவசர்மா தன் யாகத்தை முடித்துக்கொண்டு ஆசிரமம் திரும்பினார். விபுலர் அவரை வணங்கி தன்னால் காக்கப்பட்ட குரு பத்தினியை அவரிடம் ஒப்படைத்து இந்திரன் வந்து போனதைத் தெரிவித்தார்.

ஆனால் அவர் எப்படி அவனிடமிருந்து அவளைக் காத்தார் என்னும் விபரத்தைக் கூறவில்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.

– அப்துல்கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விபத்துக்களைத் தடுக்க தீர்ப்புகள் தேவை...

யுத்த காலத்துக்கு ஈடாக விபத்து மரணங்கள் எம் மண்ணில் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

வீதி விபத்து உட்பட கடலில், குளத்தில், ஆற்றில் மூழ்கி இறப்பது வரையில் ஏகப்பட்ட மரணங்கள் நாள்தோறும் நடந்தேறுகின்றன.

இவ்வாறு நடக்கின்ற விபத்து மரணங்களைப் பார்க்கின்றபோது, மனித உயிர்கள் இந்தளவுக்கு மலிந்து விட்டதா? என்று எண்ணத் தோன்றும்.

ஆம், ஒவ்வொரு நாளும் நடக்கின்ற விபத்துக்களில் ஏற்படும் மரணங்கள் வெறும் செய்தியாகப் பதிவிடுவதோடு அந்தச் சம்பவம் மறந்து போகிறது.

அதிலும் இன்னொரு விபத்து மரணம், முன்னைய விபத்து மரணத்தை மறக்கச் செய்கிறது என்று கூடச் சொல்ல முடியும்.

அந்தளவுக்கு மனித உயிர்களின் பெறுமதியை எவரும் நினைத்துப் பார்ப்பதாக இல்லை.

நேற்று முன்தினம் காரைநகர் கடலில் நீராடச் சென்ற மாணவன் ஒருவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்து போனார்.

2022ஆம் ஆண்டின் முகிழ்ப்போடு அந்த மாணவனின் வாழ்வு முடிந்து; அந்த மாணவனின் குடும்பத்தை துன்பக் கடலில் ஆழ்த்தி விட்டது.

இதுபோல 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்த விபத்து மரணங்களைப் பட்டியல்படுத்தும்போது, இங்கு என்னதான் நடக்கிறது என்று கேட்பதைத் தவிர, வேறு எதுவும் தெரியவில்லை.

அந்தளவுக்கு விபத்து மரணங்கள் மலிந்து விட்டன.

வாகன சாரதிகள் வீதி விதிகளைப் பின்பற்றுவதாக இல்லை. போதாக்குறைக்கு சாரதிகள் கையடக்கத் தொலைபேசியில் உரையாடியபடி வாகனங்களைச் செலுத்துகின்றனர்.

இன்னும் சிலர் மதுபோதையில் வாகனம் ஓட்டுகின்றனர். இவைதவிர, மற்றொரு தரப்பு உச்ச வேகத்தில் ஓடுகின்றனர்.

எனினும் விபத்தைத் தடுப்பதில் போக்குவரத்துப் பொலிஸாரின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை.மாறாக, விபத்து நடந்த இடத்தை அளந்து குறிப்பதோடு அவர்களின் கடமை முடிந்து போகிறது.

இவை ஒருபுறமிருக்க; கடலில், குளத்தில் மூழ்கி இறக்கின்ற சம்பவங்களை அறியும் போது தலைசுற்றுகிறது.

கடலில் நீராடுவதாக இருந்தால் நீச்சல் அங்கி அணிந்திருக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் கடலில் இறங்க முடியாது என்ற நிபந்தனைகளை அந்தந்த உள்ளூராட்சி அமைப்புகள் விதித்தால், என்ன என்று ஏழை மனம் நினைக்கிறது.

கூடவே நீராடக்கூடிய காரைநகர், சாட்டி, காங்கேசன்துறை, கீரிமலை உள்ளிட்ட கடல் எல்லைகளில் நீச்சல் தெரிந்தவர்களை நியமித்து அவசர உதவிக்குரிய படகையும் அந்த இடத்தில் நிறுத்தி கண்காணிப்புச் செய்தால் நல்லதல்லவா? என்றெல்லாம் சிந்திக்கத் தோன்றுகிறது.

ஆம், மனித உயிரைக் காப்பாற்றுவதென்பது மிகவும் முக்கியமானது. கடலில் குளித்தவர் இறந்து விட்டார் என்று கதையை முடிப்பது முறையுமல்ல. நீதியுமல்ல என்பதால்,

நீராடக்கூடிய கடல் பரப்பில் கண்காணிப்பு சேவை கட்டாயம் என்பதான தீர்ப்புக்களை எங்கள் நீதிபரிபாலனங்கள் வெளிப்படுத்துமாயின், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் அப்பணியை நிச்சயம் நிறைவேற்றும். அதன் மூலம் அருமந்த உயிர்கள் காப்பாற்றப்படும்.

## இலங்கையில் சடுதியாக அதிகரித்துள்ள ஓமிக்ரோன்

### பூஸ்டரை விரைவுபடுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஒமிக்ரோன் திரிபு பரவல் திடீரென அதிகரித்துள்ள நிலையில் வேகமாக பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவ நிபுணர்கள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசி தொற்று நோயில் இருந்து மிகச் சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது.

குறிப்பாக கடுமையாக நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் தேவையை தவிர்ப்பதில் பூஸ்டர் தடுப்பூசி பங்களிப்புச் செய்கிறது. கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் ஆபத்தான அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய தேவையை தவிர்ப்பதில் பூஸ்டர் தடுப்பூசி 88% பயனுள்ளதாக இங்கிலாந்து சுகாதார பாதுகாப்பு அமைப்பின் புதிய தரவுகள் தெரிவிக்கின்றன.

முதல் கோவிட் தடுப்பூசி மருத்துவமனையில் சிகிச்சை தேவைப்படும் அபாயத்தை 52% குறைக்கிறது. இரண்டாவது தடுப்பூசி 72% ஆக பாதுகாப்பை அதிகரிக்கிறது. எனினும் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட 25 வாரங்களுக்குப் பின்னர் அதன் பாதுகாப்பு செயற்திறன் 52% ஆக குறைந்துள்ளமையும் ஆய்வில் தெரியவந்துள்ளது. எனினும் 3 ஆவது பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டாலும்கூட 88% பேருக்கு மருத்துவமனை அனுமதி தேவைப்படவில்லை எனவும் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன என ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார். (ஞா)

#### மண்ணெண்ணெய்க்கு மாற்றாக

## விமான எரிபொருளை இறக்குமதி செய்யத் திட்டம்

(கொழும்பு)

மண்ணெண்ணெய்க்கு மாற்றாக விமான எரிபொருளை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சின் செயலாளர் கே.ஆர். ஒல்கா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய மண்ணெண்ணெய் தேவையை சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக பூர்த்தி செய்து வருவதாகவும் எனினும், தேவையான தொகையை வழங்க முடியாது என நிரூபிக்கப்பட்டால், விமான எரிபொருளை உள்ளபடியே நாட்டிற்கு இறக்குமதி செய்யவுள்ளதாக ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது, விமான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் இடையே பெரிய வித்தியாசம் இல்லை. இலங்கை கடந்த பல மாதங்களாக விமான எரிபொருளை இறக்குமதி செய்து வருவதாக தெரிவித்த அமைச்சின் செயலாளர், விமான எரிபொருள் இயற்கையில் நிறமற்றதாக இருந்தாலும், நாட்டின் மண்ணெண்ணெய் தேவையை பூர்த்தி செய்ய அதனை பயன்படுத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (ஞா)

#### உரிய அனுமதிப்பத்திரமின்றி

## மணல் ஏற்றிச் சென்ற 2 பேர் நாவற்குழியில் கைது

(சாவகச்சேரி)

உரிய அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற இரண்டு உழவியந்திரங்கள் நாவற்குழிப் பகுதியில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

உழவியந்திரங்களுடன் அதனைச் செலுத்திச் சென்ற இரண்டு நபர்களும் கைதாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஞா-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதே சத்தில்** மாகியப்பிட்டி சந்தை, மதவடி, பெருமாள் கடவை, வைரவர் கோவில் சண்டிலிப்பாய், செட்டிப்புலம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம் ஜீவன்அரிசிஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான்கோட்டம், மறக்காறம்பளை-கணேசபுரம் குருக்களூர்மன்னார் வீதிஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### உலகமே ஒரு கலாசாலை



உலகமே ஒரு பழைய பள்ளிக்கூடம்
ஒவ்வொருவருக்கும் அன்றாட வாழ்வில்
பல புதிய பாடம் சூழ் நிலைகட் கேற்ப
பலாத் காரமாகப் போதிக்கும், என்றும்
நலம் விரும்பும் அறிஞர் பலர் செய்யும் போதம்
நல் வாழ்வில் அவர்கள் சந்தித் தாராய்ந்த
சில முக்கிய நிகழ்ச்சிகளின் விளக்கமாகும்
சிந்தனையைச் செயல் திறனை ஒழுங்கு செய்யும்.

இந்த உலகம் ஒரு பழமையானதும், பெரியதுமான கலாசாலையாகும். சூழ்நிலைகளுக்கேற்றபடி உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் புதிய புதிய பாடங்கள் பலாத்காரமாகப் போதிக்கப்படுகின்றன. இந்தப் படிப்பை யாராலும் ஒதுக்கிவிட முடியாது. சமூக நலமே குறிக் கோளாகக் கொண்டு வாழும் அறிஞர்கள் அவ்வப்போது பல விதத்தில் மக்களுக்கு நற்பயன் விளைவிக்கும் சன்மார்க்கங்களையும், வாழ்க்கை அனுபவ நுட்பங்களையும் போதனை செய்து வருகிறார்கள்.

அவர்கள் வாழ்வில் சந்தித்த முக்கிய நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து, இன்ப துன்ப [illegible] வருகிறார்கள். இந்தப் போதனைகள் அனைத்தும் மக்களின் [illegible]மையை ஊட்டி வாழ்வை ஒழுங்குபடுத்தி வளப்படுத்துவனவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II


46

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்






**தமிழ்நாட்டில் வடமொழியை எழுதுவதற்காக உருவாக்கப்பட்டதே கிரந்த எழுத்துக்கள் (ஸ,ஷ,ஜ,ஹ போன்றவை) ஆகும். பல்லவர்கள் தமிழையும், வடமொழியையும் ஒருங்கே போற்றினர். பல்லவர்கள் காலத்தில் தான் கிரந்தம் எழுச்சியுடன் திகழ்ந்தது. தமிழக மன்னர்கள், தென்-கிழக்காசிய நாடுகள் மீது படையெடுத்ததின் விளைவாக, அங்கும் கிரந்தம் பரவியது. தமிழகத்தில் வடமொழியாதிக்கத்தின் வீழ்ச்சியையடுத்து கிரந்த எழுத்து முறையும் வீழ்ச்சி அடைந்தது.**

### கிரந்த எழுத்துமுறை தோற்றமும் வளர்ச்சியும் முடிவும்

தமிழ் மொழி எழுத்துக்களைப் பாவித்து வடமொழி (சமஸ்கிருதம்) எழுத முடியாது. ஆனால் மலையாளம், கன்னடம், தெலுங்கு, சிங்களம் போன்ற மொழிகளின் எழுத்துக்களைக் கொண்டு வடமொழி/பாளி மொழிகளை எழுதலாம். தமிழ் நாட்டில் வடமொழியை எழுதுவதற்காக உருவாக்கப்பட்டதே கிரந்த எழுத்துக்கள் (ஸ,ஷ,ஜ,ஹ போன்றவை) ஆகும்.

கிரந்த எழுத்துமுறை கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுகளில் பிராமி எழுத்துமுறையிலிருந்து தோன்றியிருக்கக்கூடுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வட இந்தியாவில் பிராமி எழுத்து முறை நாகரி எழுத்து முறையாக திரிந்த வேளையில், தென்னிந்தியாவில் பிராமி எழுத்துமுறை கிரந்த எழுத்து முறையாக திரிந்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

கிரந்தத்தில் இருந்து இக்காலத் தமிழ் எழுத்துக்கள் தோன்றியிருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர். ஆனால் தமிழ் அறிஞர்கள் இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர். தென்னகத்தில் இருந்த வடமொழிப் பண்டிதர்கள், வடமொழியை எழுவதற்காக அப்போது வழக்கிலிருந்த தமிழ் எழுத்துக்களில் சிறுசிறு மாற்றங்களை செய்தனர் என்றும், இதன் விளைவாகவே கிரந்த எழுத்துமுறை தோன்றியிருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். ஆகவே அக்கால தமிழ் எழுத்துமுறையின் நீட்சியே கிரந்தம் என்று கூறுகின்றனர்.

பலநூற்றாண்டுகளுக்கு முன்பு வடமொழி கிரந்த எழுத்திலேயே எழுதப்பட்டு வந்தது. தென்னிந்தியா முழுவதும் கிரந்த எழுத்துமுறை பரவியிருந்தது. தமிழகத்தில் மணிப்பவளம் (மணிப்பிரவாளம் என்பது தமிழும் வடமொழியும் கலந்து எழுதப்பட்ட மொழி நடையாகும்) எழுதவும் கிரந்தம் பயன்படுத்தப்பட்டது.

தமிழ்ச்சொற்களை வட்டெழுத்திலும் வடமொழிச்சொற்களைக் கிரந்தத்திலும் எழுதினர். பல்லவர்கள் தமிழையும், வடமொழியையும் ஒருங்கே போற்றினர். பல்லவர்கள் காலத்தில் தான் கிரந்தம் எழுச்சியுடன் திகழ்ந்தது. பல்லவ மன்னர்களின் செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலும் இவ்வகை எழுத்துக்கள் காணப்படுகின்றன. சமணர்கள் இவ்வெழுத்து முறையை பயன்படுத்தி, ஸ்ரீபுராணம், ஸ்ரீமாகநந்தி, பரமாகமம் ஆகியவைகளை உருவாக்கியுள்ளனர். வைணவ பெரியார்கள் திருவாய்மொழி பாடல்களுக்கு விரிவுரையும், வியாக்கியானங்களையும் கிரந்த எழுத்துக்களாலேயே எழுதி இருக்கிறார்கள்.


தமிழகமன்னர்கள், தென்-கிழக்காசியநாடுகள்மீதுபடை யெடுத்ததின் விளைவாக, அங்கும் கிரந்தம் பரவியது. பர்மியமொழி, தாய் (Thai) மொழி, கெமர் (Khmer) மொழி முதலிய மொழிகளின் எழுத்து முறை கிரந்ததிலிருந்தே தோன்றியவையாகும். சிங்கள எழுத்து முறையும் கிரந்த எழுத்து முறையிலிருந்து தோன்றியதே ஆகும். தமிழகத்தில் வடமொழியாதிக்கத்தின் வீழ்ச்சியையடுத்து கிரந்த எழுத்து முறையும் வீழ்ச்சி அடைந்தது.

இருப்பினும் கி.பி.19 ஆம் நூற்றாண்டு வரையிலும் கூட தமிழகத்தில் வடமொழியினைக் கிரந்த எழுத்துக்களிலேயே எழுதினர். பின்னர் கிரந்த எழுத்து முறை முற்றிலும் மறைந்து தமிழகத்தில் வடமொழி தேவநாகரியில் எழுதத் தொடங்கப்பட்டது.

இருப்பினும் சில வேத பாடசாலைகளில் கிரந்தம் கற்பிக்கப்படுகிறது. தமிழைப் பொருத்த வரையில் மணிப்பவள எழுத்து நடை மறைந்தாலும், “ஸ”, “ஜ”, “க்ஷ”, “ஷ” ,“ஸ்ரீ”, “ஹ” போன்ற கிரந்த எழுத்துகள் வடமொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் உச்சரிப்புக்கு ஏற்ப குறிக்க இன்றும் பயன்படுத்தப்படுகின்றன.

இவை தற்போதும் தமிழ் எழுத்துக்களுடன் சேர்த்து எழுதப்படுவதைக் காணலாம். ஆனால் இவை தவிர்க்கப்பட வேண்டுமென்பதே தமிழ் அறிஞர்களின் கருத்தாகும். இவை வெறும் 6 எழுத்துக்களே என எண்ணிவிட வேண்டாம். இவை பிற எழுத்துக்களுடன் சேர்ந்து மேலும் பலவாகப் பெருகும். உதாரணமாக ஸா,ஸி,ஸீ…., ஷா, ஷி,ஷீ…. … என்பவற்றைக் குறிப்பிடலாம். இவையெல்லாம் சேர்ந்தால் தமிழில் எத்தனை எழுத்துக்கள், எண்ணிப்பாருங்கள். தனது மொழியில் இல்லாத எழுத்துகளைப் பயன்படுத்தும் நிலை. தமிழல்லாமல் வேறு எந்த மொழிக்கும் கிடையாது.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 பேர்...

ளது.

புத்தாண்டு நாளான நேற்று முன் தினம் மட்டும் 24 பேர் உயிரிழந்துள்ள தாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 15 ஆயிரத்து 19 ஆக அதிகரித் துள்ளது. (ஞா)

## பட்டதாரி பயிலு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கிய தொலைநோக்கு கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பயிலுநர் பட்ட தாரிகளுக்கே இவ்வாறு நிரந்தர நிய மனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்திருப்பதாக அமைச்சரவை உப குழுவின் தலைவரான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலவசக் கல்வியின் பிரதிபலனாக உயர்கல்வி கற்றவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் ஜனாதிபதியின் கொள் கைத் திட்டத்திற்கு அமைவாக இந்த நிரந் தர நியமனம் வழங்கப்படுகின்றது.

53 ஆயிரம் பயிலுநர் பட்டதாரிகள் தற் போது அரச நிறுவனங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றுகின் றனர்.

இவர்களில் ஒருவருடப் பயிற்சிக் காலத் தினை நிறைவு செய்த 42 ஆயிரத்து 500 பேருக்கு இன்று முதல் நிரந்தர நிய மனம் வழங்கப்படும்.

அத்துடன் கடந்த வருடம் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பயிலுநர் பட்ட தாரிகளாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு எதிர்வரும் ஏப் ரல் மாதத்தில் நிரந்தர நியமனம் வழங் கப்படும் என்றார். (ஞா)



















## பொலிஸ்...

யோகத்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்தினர் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு சென்றிருந்த நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளதாகவும் அவ ரது உயிரிழப்புக்கான காரணம் கண்டறி யப்படாத நிலையில் மேலதிக விசாரணை கள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். (ஞா-18,33)

## மன்னாரில்...

தில் தற்போதுவரை 35 பேர் கொரோனா வால் உயிரிழந்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 70 வயதுடைய முதிய வர் ஒருவர் கடந்த 30ஆம் திகதி மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் அவர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தநிலை யில், கொரோனாத் தொற்றின் காரணமாக ஏற்பட்ட நிமோனியா காய்ச்சலால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஞா-285)

## இனப்படுகொலை...

சாளருமான எஸ்.எம்.மரிக்காரின் கொலன் னாவ தேர்தல் தொகுதியின் வாக்களிப்பு நிலையங்களின் தலைவர்கள் நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதன்போதே அவர் இந்த விடயத் தினை தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எரிவாயு அனர்த்தம் தொடங்கிய நாள் முதல் எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி அனைத்து தகவல்களையும் நாட்டிற்கு அம்பலமாக்கியுள்ளது.

அரசாங்கம் என்ற ஒன்று அமைக்கப் படுவது மக்களைக் காக்கவே எனவும் துரதிஷ்டவசமாக இலங்கை அரசாங்கம் மக்களைக் கொல்லாமல் கொல்கிறது. இவ்வாறு நோக்கும்போது தற்போதைய அரசாங்கம் இனப்படுகொலை செய்யும் அரசாங்கமாகவே உள்ளது என்றார். (ஞா)

## இடியுடன் கூடிய...

வளிமண்டலவியல் திணைக்களம் அறி வித்துள்ளது.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங் களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத் திலும் இடைக்கிடை மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றருக்கு காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும்.

இடியுடன் கூடிய மழையுடன் கடும் காற்று மற்றும் மின்னலினால் ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பாக இருக்குமாறும் அந்தத் திணைக்களம் கோரியுள்ளது. (ஞா)

## தேவையேற்பட்...

வித்த அமைச்சர், இந்த மாற்றம் குறித்து அமைச்சர்கள் அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

அரசியலமைப்பின் ஊடாக உரிய தீர் மானங்களை எட்டுவதற்கு ஜனாதிபதிக் கும் பிரதமருக்கும் அதிகாரம் வழங்கப்பட் டுள்ளது என்றார்.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதம ருடன் கலந்துரையாடி தேவையான நட வடிக்கைகளை எடுப்பார் என அமைச்சர் ரம்புக்வெல குறிப்பிட்டார்.

அமைச்சர் ரம்புக்வெலவுக்கு புதிய அமைச்சுப் பதவி கிடைக்குமா? என்பது தொடர்பில் வினவியபோது, அமைச்சர் பத விக்காலம் முடியும் வரை தமக்கு ஒதுக்கப் பட்ட கடமைகளை தன்னால் இயன்ற வரை நிறைவேற்றுவேன் என்றார். (ஞா)

## பிறந்து 31...

வால் மரணமாகியுள்ளது.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கலைச்சந்திரன் பிரகவி என்ற பிறந்து 31 நாட்களேயான குழந்தையே இவ்வாறு மரணமடைந்துள்ளது.

நேற்று அதிகாலை குழந்தை உடல் சோர்வாகக் காணப்பட்ட நிலையில் உட னடியாக யாழ்.போதனா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை 6.30 மணியளவில் மரண மடைந்துள்ளது.

மரணம் தொடர்பான விசாரணைகளை யாழ். போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி பிறேம குமார் மேற்கொண்டார். (ஞா)

## 2022...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பாரா ளுமன்ற உறுப் பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, புத்தாண்டில் பாரிய அழிவு ஏற்படும் என எச்சரித்துள் ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "இந்த 2022 ஆம் ஆண்டில் பாரிய அழிவொன்று ஏற் படப் போகிறது. விவ சாய பிரச்சினைக்கு ஒமிக்ரோன், டெல்டா என்பவை காரணம் அல்ல. கொரோனாத் தொற்று பரவ ஆரம் பித்த காலத்தில் இருந்து அத்தியா வசிய சேவைகளாக அரிசி ஆலைகள் செயற்பட்டன. விவ சாயிகளும் அவர் களுடைய வேலை களைப் பார்த்தார் கள், அவர்கள் வீட் [illegible]லை. [illegible]தான்

சிறப்பாக செய்தோம், எனக்குத்தான் அனைத்தும் தெரியும் எனக் கூறி அனைத் தையும் நாசம் செய்துவிட்டனர். இந்த உண வுத் தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு 100 வீதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான் கார ணம் என்று தெரிவித்துள்ளார். (ஞா)


## கடுமையான...

அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"என்னை இந்த நாட்டின் முதல் குடி மகனாக ஆக்குவதற்கும், அந்த பாரம்பரி யத்தைப் பேணுவதற்கும் பல அர்ப்பணிப் புகளைச் செய்த சிங்கள பௌத்தர்களைப் பாதுகாக்கும் பூரண பொறுப்பு எனக்கு இருக் கிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பல்லாயிரம் வருட வரலாற்றைக் கொண்ட சிங்களக் கலாசாரத்தையும் பாரம்பரியத்தை யும் நாம் எப்போதும் பாதுகாக்க வேண்டும். எனவே, நமது மதிப்புகள், பழக்கவழக்கங் கள் மற்றும் பாரம்பரியங்களுக்கு அரசாங் கம் தொடர்ந்து ஆதரவளிக்கும்.

இதுவரை நாம் எதிர்கொண்ட தடை களைத் தாண்டி, இந்த நாட்டின் அரச தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்த மக் களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் புதிய பயணத்தைத் தொடங்க நான் தயாராக இருக்கிறேன். "எடுக்க வேண் டிய கடுமையான முடிவுகளை எடுக்க நான் தயாராக இருக்கிறேன் என் பதை இந்த வணக்கத்திற்குரிய சங்கத்தின் முன் நான் பொறுப்புடன் அறிவிக்கிறேன்" என்றார். (ஞா)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடசாலை மாணவர்களுக்குரிய

# போக்குவரத்து சேவைக்கட்டணம் இன்றுமுதல் 20 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருள் நிவாரண கோரிக்கைக்கு அரசாங்கம் இதுவரை எந்த பதிலையும் வழங்காததால் பாடசாலை போக்குவரத்து சேவைக் கட்டணத்தை இன்றுமுதல் 20 வீதத்தால் அதிகரிப்பதற்கு அகில இலங்கை அனைத்து மாகாண பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சங்கம் தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அகில இலங்கை அனைத்து மாகாண பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் ருவன் பிரசாத்,

அரசாங்கம் கடந்த வாரம் எரிபொருட்களின் விலையை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் எமக்கு எரிபொருள் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என நாங்கள் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் அரசாங்கத்திடம் கேட்டிருந்தோம்.

ஆனால் இதுதொடர்பாக அரசாங்கம் சார்பாக யாரும் இதுவரை எம்மை அழைத்து பேசவில்லை. பாடசாலைகளின் விடுமுறை முடிந்து இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன.

அதனால் பாடசாலை போக்குவரத்து சேவைக் கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்று கூறினார். (ஞா)

# புத்தளத்தில் தீப்பந்தங்கள் ஏந்தி அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம்

(புத்தளம்)

புத்தளம் நகரில் தீப்பந்தங்கள் ஏந்தி அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்ஒன்று நேற்று மாலை இடம்பெற்றது.

புத்தளம் - கொழும்பு முகத்திடலுக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களும் மூவின மக்களும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் தொகுதி அமைப்பாளரும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஹெக்டர் அப்புஹாமி, முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸ் உட்பட புத்தளம் பிரதேச, புத்தளம் நகர சபை ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், பால்மா, எரிவாயு என்பவற்றுக்கு நிலவும் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலையேற்றம் என்பவற்றை கண்டித்தும் குறித்த தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, போராட்டக்காரர்கள் அரசுக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

அத்துடன், மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் இதன்போது கோரிக்கையையும் விடுத்தனர். (ஞா)

### எல்ல நீர்வீழ்ச்சியில்

# காணாமல்போன மூவரும் சடலங்களாக மீட்பு

### இரண்டு பேர் யாழைச் சேர்ந்தவர்கள்





ஹங்வெல்ல - அவிசாவளை, புவக்பிட்டிய தும்மோதர குமாரி எல்ல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்று காணாமல்போன மூவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் உறவினர் வீட்டுக்கு சென்ற இவர்கள் கடந்த வியாழக்கிழமை உறவினர்களுடன் குமாரி எல்ல நீர்வீழ்ச்சிக்கு நீராடச் சென்றிருந்தனர்.

திடீரென பெய்த கடும் மழையினால் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டம் அதிகரித்திருந்தது.

இதன் காரணமாக நீராடிக் கொண்டிருந்த ஆறு நபர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில்,

மூன்று நபர்களை பிரதேச வாசிகள் காப்பாற்றியுள்ளனர். ஒரு யுவதியும் இரண்டு சிறுமிகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

ஹங்வெல்ல பொலிஸார் மற்றும் களுவக்கல்ல இராணுவ முகாமின் அதிகாரிகள், பிரதேச வாசிகள் இணைந்து காணாமல் போனவர்களைத் தேடியுள்ளனர்.

இதன்போது, இரவு 11 மணியளவில் சிறுமி ஒருவரின் சடலம் நீர்வீழ்ச்சியில் இருந்து 100 மீற்றர் தொலைவில் கண்டெடுக்கப்பட்டது.

உயிரிழந்த சிறுமி 16 வயதுடைய எட்மன் ஜேவதாஸ் உஷாரா என்பவராவார்.

மேலும், காணாமல்போன இருவரும் நேற்று முன்தினம் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இல. 132, மடம் கொன் வன்ட் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட்மன் ஜேவதாஸ் மிதுர்ஷா (வயது -14), இல. 30/3, கெரவலபிட்டிய, வத்தளையைச் சேர்ந்த வேவனி ஜேசுதாஸ் (வயது-29) ஆகியோரின் சடலங்களே நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு சிறுமிகளும் சகோதரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்பப்பிரிவு
இறுதிச் செயலமர்வு - 2021
(Techno World இனால் நடாத்தப்படும் மாபெரும் இறுதிக் கருத்தரங்கு)
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
06,07,08,09 and, 10 JANUARY 2022
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ஆசிரியர்கள்
ராகவன்(B.sc)
முருகநிறோயன்(B.sc)
நிறோஜன்(B.sc)
உமாகாந்தன்(BIT)
" காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை "
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்
இடம் - வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு...
0770175346
(C-3397)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9290)
076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(9360)

Physics (பௌதிகவியல்)
2022, 2023 உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். (Personal and group classes) (9326)
076 157 0107

அரச உத்தியோகத்தர் வினைத்திறன்/ பதவி உயர்வுக்கான நூல்
"அரச திணைக்கள தாபன அலுவலக முறைமை, நிதிமுறைமை"
தொகுப்பாளர்கள் (நூல் பெற தொடர்பு)
த.ஜெயராஜ் 077 733 6533
077 557 4325
ந.கமலநாதன் 077 201 4103
(9361)

27.12.2021 திகதிய பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பகிரங்க ஏல விற்பனை விளம்பர இணைப்பு
LG 8424, LG 8428 வட்டா வாகனங்கள் ஏல விற்பனை விளம்பரத்தில் கீழ்வருவன இணைக்கப்படுகின்றது.
○ காலம் : 21.01.2022 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணி
○ இடம் : தலைமைப் பணிமனை, பூ.ப.நோ.கூ. சங்கம், நாகதேவன்துறை வீதி, பூநகரி
❖ தெரிவு செய்யப்படுபவர்கள் அன்றைய தினமே முழுப் பணத்தினையும் செலுத்தி வாகனங்களைப் பொறுப்பேற்க வேண்டும்.
❖ ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் மீளப்பெறும் வைப்புப் பணமாக ரூபா 10,000.00 செலுத்திய பற்றுச்சீட்டு வைத்திருத்தல் வேண்டும்.
தா.அரியரத்தினம்
தலைவர்
பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், நாகதேவன்துறை வீதி, பூநகரி.
(C-3309)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
0768226240 DHL
(C-3381)

வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்
கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும்
ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்

IELTS Life Skills B1
வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777 R1
(C-3382)

10வருட வெற்றிகரமான சேவையில்....
கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்
புதிய பிரிவுகள் ● திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள் 06/01/2022 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம். (C-3400)
இதுவரையில் 208 மாணவர்கள் எமது ஆலோசனை வாயிலாக பயன்பெற்றுள்ளனர்
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.